## தலைப்பு 019 – பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 019 - பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 23 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 07 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்ற எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியிலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தில் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைய கடந்த வருடத்தின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|
| கட்டுநிதி இணைக்கக் கூற்றின் மீதி | 1.6.1(ஈ)(i) |

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) வருமானமல்லாத பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கட்டணங்கள், மிகைக் கட்டணம், தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் ரூபா 49,724 மற்றும் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 219,869 காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான மீதிகள் நிறுவனத்தின் பரீட்சை மீதியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த பணம், காசுப் புத்தகத்தின் பெறுவனவுகள் நிரலில் கட்டணங்கள் மற்றும் வருமானப் பெறுவனவுகளின் கூட்டுத்தொகையாகும். | நிறுவனத்தின் பரீட்சை மீதியினுள் உள்ளடங்கியுள்ள விடயங்களை அடிப்படையாக கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

## (ஆ) மீண்டெழும் செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பரீட்சை மீதிக்கமைய மீளாய்வாண்டின் ரூபா 230,982 தொகையான மானியங்கள் மற்றும் மாற்றல் செலவினங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். |

## (இ) மூலதனச் செலவினம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 10,586,372 மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 14,244,186 ஆனமையால் செயற்பாட்டு மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,657,814 ஆன போதிலும், அது காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அந்த பெறுமதியால் காசுப்பாய்ச்சல் கூற்று இணங்கியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்துகின்றேன். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஈ) கட்டுநிதி இணக்கக்கூற்றிக் மீதி**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த வருடத்தின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் நிதிச் செயலாற்றல் கூற்றில் கட்டுநிதி இணக்கக்கூற்றின் பிரகாரம் ரூபா 1,352,333 ஆன நேர் பெறுமதியொன்று மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் கடந்த வருடத்தில் மறைப் பெறுமதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன். | கடந்த வருடத்தின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீதிகள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | பரீட்சை மீதிக்கமைய ஏனைய வருமானத் தலைப்புகளுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,628,505 தொகையான வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிராததுடன், கட்டுநிதி இணக்கக் கூற்றில் அது ரூபா 1,537,355 ஆக ரூபா 91,150 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துகின்றேன். | நிதிக்கூற்றுக்கள் உரிய மாதிரிகளுக்கு இணங்க தகவல்கள் சரியாக உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியமையால், 2106 – மென்பொருள் அபிவிருத்தி செலவின விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 500,000 ஆன மொத்த நிதியேற்பாடும் எஞ்சியமைக்கான காரணமாக குறிப்பிடப்பட்டிருந்த மென்பொருள் அபிவிருத்தி பணிக்காக போதிய நிதியேற்பாடு காணப்படாமை என்பதை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. | நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் மூலதன செலவின விடயங்களில் செலவினம் மேற்கொள்ளல் அத்தியாவசியமான பணிகளுக்காக மட்டுப்படுத்துவதற்கு தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் ஊடாக அறிவுரை வழங்கப்பட்டிருந்த காரணத்தால்இந்த நிதியேற்பாடு எஞ்சியுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், நிதியேற்பாடு எஞ்சியமைக்கான சரியான காரணங்கள் குறிப்பிடப்பட வேண்டும். |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வு அவதானிப்புகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

| | கணக்காய்வு அவதானிப்புகள | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை | | |
| **(அ)** | **இலங்கை சனநாயக சேசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 138(5), 231(1) | 113,876 | 07 சந்தர்ப்பங்களில் விலைப்பட்டியல்களின் மூலப் பிரதிகளுக்கு பதிலாக அச்சிடப்பட்ட பிரதிகளுக்கு செலவினங்கள் சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | விலைப்பட்டியலின் அசல் நகலைப் பயன்படுத்தி, நிலுவைத் தொகையின் கட்டுநிதி தொகை மட்டுமே செலுத்தப்பட்டுள்ளது, மீதமுள்ள தொகை கட்டுநிதி தொகையைப் பெற்ற பிறகு செலுத்தப்படும். எதிர்காலத்தில், இதுபோன்ற சந்தர்ப்பங்களில், மீதமுள்ள கட்டண வவுச்சரில் ஒரு சிறப்பு குறிப்பு செய்யப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விலைப்பட்டியல்களின் மூலப் பிரதிகளுக்குகொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 267(1) | 23,092,667 | ஊழியர் ஒருவரின் சம்பளம் / படியினை வருமானத்திற்கு செலுத்தி அதனை பெற்றுக்கொண்டதாக | தற்போது சம்பளப் பட்டியலில் கையொப்பம் இடுவது தொடர்பாக முறையான வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்ப | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் சம்பளத்தினை வருமானத்திற்கு செலுத்தி அதனை பெற்றுக்கொண்ட பெறுநரின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | பெற்றுக்கொண்டவரின் கையொப்பமின்றி சம்பளம் வழங்கப்பட்டிருந்த 12 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | ட்டு வருவதால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | கையொப்பத்தை சம்பளப்பட்டியலில் வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | | |
| (i) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கையின் IV ஆம் பந்தி | 2,558,370 | வழக்கமான வேலை நேரத்திற்குப் பிறகு நேரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் மேலதிக நேர படிகள் மற்றும் கொடுப்பனவுகள், நேர அடிப்படையை கொண்டிருந்ததால் கைவிரல் அடையாள இயந்திரம் மூலம் சரிபார்க்க வேண்டும், ஆனால் 2022 ஜனவரி முதல் டிசம்பர் வரை, அத்தகைய சரிபார்ப்பு இல்லாமல் மேலதிக நேர படிகள் மற்றும் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. | களப்பணிகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கே இந்த மேலதிக நேர கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களின் கடமைகளை மேற்பார்வை செய்யும் அருகில் உள்ள நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர /பதவிநிலை உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படும் வருகை மற்றும் வெளிச்செல்லல் உறுதிப்படுத்தல்களின் அடிப்படையில் மேலதிக நேர படிகள் செலுத்தப்படுகிறது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009, 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(1) மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க | - | அமைச்சரவை, அமைச்சின் செயலாளர்கள், நிறுவனத் தலைவர்கள் உள்ளடங்களாக அனைத்து அரச ஊழியர்களும் தமது சேவை நிலையத்திற்க வருகைதரல் | இது தொடர்பில் கவனம் செலுத்தி கைவிரல் அடையாள இயந்திரம் பொருத்தும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| சுற்றறிக்கை | மற்றும் வெளிச்செல்லல் கைவிரல் அடையாள இந்திரத்தின் மூலம் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2023 பெப்ரவரி 08 ஆந் திகதி வரையிலும் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் ஆகியவற்றை உறுதிப்படுத்த இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

#### 3.1.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 2/2020 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய நிதி அமைச்சின் சுற்றறிக்கையின் வழிகாட்டில் இலக்கம் 13 இன் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான விரிவான பெறுகைகள் திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரிவான பெறுகைகள் திட்டமொன்று சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு இணங்க விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ நலிவுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பாராளுமன்ற அமர்வுகள் நடைபெறும் நாட்களில் மாலை 5.30 மணிக்குப் பிறகு பணிபுரிந்ததற்காக வழங்கப்படும் போக்குவரத்துக் கட்டணமாக, பதவியணி மதியுரைக் குழுவின் மேவுகை அங்கீகாரத்தின் கீழ், பாராளுமன்ற அமர்வுகள் மாலை 5.30 மணிக்குள் முடிவடைந்த 2 நாட்களுக்குமாகவும் மொத்தம் ரூபா 56,250 செலுத்தப்பட்டது. ஆனால் கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 08 ஆந் திகதி வரை அந்த அங்கீகாரத்தை பெற நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பாராளுமன்ற கூட்டங்கள் மாலை 5.30 மணிக்கு முன்னர் முடிவடைந்த அந்த இரண்டு நாட்களுக்கும் வழங்கப்பட்ட போக்குவரத்துக் கொடுப்பனவை உரிய அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | உரிய அனுமதிகளுக்கு உட்பட்டு பணம் செலுத்தப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளகக் கணக்காய்வுப் பணியினை உரிய முறையில் மேற்கொள்வதற்காக உரிய நடைமுறைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் பதவியொன்றினை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினுள் உருவாக்கி எதிர்காலத்தில் நிர்வாக நடவடிக்கைகளினுள் உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 6.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு உத்தியோகத்தர்களின் தொகுதிக்கமைய இனங்காணப்பட்ட திறன்கள் இலக்கினை அடைவதற்காக தயாரிக்கப்பட வேண்டிய இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 01 இல் காணப்படும் மாதிரியை அடிப்படையாக கொண்டு ஒட்டுமொத்த பதவியணிக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுக்கான மனித வளத் திட்டத்தில் பயிற்சி வாய்ப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன, மேலும் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளின் அடிப்படையில் தேவைக்கேற்ப பயனுள்ள பயிற்சி வாய்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அலுவலகத்தின் பணிகள் மறுசீரமைக்கப்பட்டு வருவதால், அதன் பிறகு செயல்திறன் ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |